(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(12).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 யூன் 20 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2024 யூலை 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல், மற்றும் வலுவுறுத்துதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2369/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

சமாதி தியான மற்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2024 யூலை 23, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1704/2024

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது சேவையாற்றி வருகின்ற அமய ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்கள் தற்போது ஆற்றி வருகின்ற கடமைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(v) அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1729/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் இன்றளவில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் காரணமாக உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளுக்குப் பதிலாக பாதுகாப்பான புகையிரத கடவைகளைப் பொருத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1739/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை, கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றும் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களின் எண்ணிக்கை அவர்களின் தொடர்பாடல் மொழிக்கு அமைய தனித்தனியே யாது;

(iv) மேற்படி வைத்தியசாலையில் தற்போது காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1751/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘கொவிசெத’ லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(iii) ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இதுவரை மேற்படி லொத்தர் சீட்டு விற்பனை மூலம் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் அளிக்கப்பட்ட பரிசுத் தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி லொத்தர் சீட்டு விற்பனை மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தை கமத்தொழிலாளர்களின் நலன்புரிக்காக செலவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1878/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில், 2015ஆம் ஆண்டிலிருந்து இதுவரை க.பொ.த. (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த மாணவர்களின் எண்ணிக்கை விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய பாடத்துறைகளுக்கு அமைய சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மாத்தளை மாவட்டத்திலுள்ள மாணவர்களில் பெரும்பாலானவர்களை க.பொ.த (உயர் தர) விஞ்ஞானம் அல்லது கணித பாடத்துறைகளுக்கு ஆற்றுப்படுத்த எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1910/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் உடைமையிலுள்ள காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள்;

(ii) மேற்படி காணிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு, குறைபயன்பாடுடைய காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தாகக் காணப்படும் காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள்;

என்பன வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட குறைபயன்பாடுடைய காணிகளை பராதீனப்படுத்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் தொடர்பில் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் கொள்கை யாது;

(ii) மேற்படி காணிகளில் இன்றளவில் பராதீனப்படுத்தப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1914/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்வரும் 05 வருடங்களுக்கான இலங்கையின் மின்சாரத் தேவை தொடர்பில் எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், எதிர்வரும் 05 வருடங்களுக்கான இலங்கையின் மின்சாரத் தேவை குறித்த தகவல்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி மின்சாரத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிர்வரும் 05 வருட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1918/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெளிநாடு சென்றுள்ள இலங்கைப் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், வீட்டுப் பணிக்காகவும் வேறு தொழில் வாய்ப்புகளுக்காகவும் சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கையானது, பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்கள் எனும் வகையில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) இப் பெண் தொழிலாளர்களின் நலனோம்புகை தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1943/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மின்சக்தி நெருக்கடி தொடர்ந்தும் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) மின்சக்தி நெருக்கடி காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி மின்சக்தி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2004/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்து வழங்குநர்களுக்கு இன்றளவில் செலுத்தப்படவேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மோசடிகள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ள வழங்குநர் நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வழங்குநர் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வழங்குநர் நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் பணம் செலுத்துதல் தாமதமாகியுள்ள மேற்படி (அ)(ii)இல் குறிப்பிடப்பட்ட வழங்குநர் நிறுவனங்கள் அல்லாத மருந்து வழங்குநர் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வழங்குநர் நிறுவனத்திற்கும் செலுத்தப்பட வேண்டியுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) பணம் செலுத்துதல் தாமதமடைகின்ற காரணத்தினால் மேற்படி வழங்குநர் நிறுவனங்களுக்கு வட்டி செலுத்தப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூலை 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தேசிய மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் மேற்படி மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகளில் அரைவாசிக்கு மேல் மருத்துவமனை இழந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அனுமதியின்றி குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்கள் தொடர்பாக இன்றளவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனுமதியற்ற குடியிருப்பாளர்களை பிறிதொரு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு இன்றளவில் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திட்டம் யாதென்பதையும்;

(vi) ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

42/2024

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்புறுபிட்டிய, மிரிஸ்வத்த வளவ்வயில் வசித்த சாரா லோரென்சினா விஜேசிங்ஹ அம்மையார் தனது பெற்றோரை நினைவு கூருமுகமாக மாத்தறை, ராஹுல வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்த குணதிலக்க ஞாபகார்த்த மண்டபம் உடைத்து அகற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மண்டபத்தை உடைத்து அகற்றுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது உடைத்து அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குணதிலக்க ஞாபகார்த்த மண்டபத்திற்குப் பதிலாக நிர்மாணிக்கப்படும் புதிய ஞாபகார்த்த மண்டபத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) புதிய ஞாபகார்த்த மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக கல்வியமைச்சினால் செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புதிய ஞாபகார்த்த மண்டபத்தின் நிர்மாணப் பணிகளில் இன்றளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்;

(ii) எஞ்சிய பகுதியினைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1970/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள்/நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் அரச துறையைச் சேர்ந்த மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த தொழிற்பயிற்சி நிலையங்கள்/ நிறுவனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள்/ நிறுவனங்களினால் நடாத்திச் செல்லப்படுகின்ற கற்கைநெறிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழிற்பயிற்சி நிலையங்கள்/ நிறுவனங்கள் பதிவு செய்யப்படும் காலஎல்லை யாதென்பதையும்;

(ii) தொழிற்பயிற்சி நிலையங்கள்/ நிறுவனங்களின் பதிவினை நீடிப்பதற்காக அறவிடப்படும் கட்டணம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1993/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2023.07.01 ஆம் திகதி பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் வருகை தந்த செவனகல சீனித் தொழிற்சாலை நிருவாகத்தினர் ஒங்டும வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள வீடுகளின் நீர் மற்றும் மின்சாரத்தை துண்டித்துள்ளார்கள் என்பதையும்;

(ii) ஓய்வுறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தங்கிவாழ்பவர்களை ஆட்சேர்ப்பதற்கு அல்லது குடியிருப்பதற்காக காணியொன்றை வழங்குவதற்கு, 1983-1986 காலப்பகுதியில் குறிப்பிட்ட வீடமைப்புத் தொகுதியின் வீடுகளில் ஊழியர்களை குடியமர்த்தும்போது நிருவாகத்தினர் வாக்குறுதியளித்துள்ளார்கள் என்பதையும்;

(iii) 30-40 வருடங்களாக குறிப்பிட்ட வீடுகளில் குடியிருந்தவாறு நிறுவனத்தின் மேம்பாட்டின் பொருட்டு இந்த ஊழியர்கள் செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடியிருக்கும் ஊழிர்களை நியாயமற்ற விதத்தில் நடாத்தியவாறு நிறுவனத்தின் காணித் துண்டுகளை குடியிருப்பதற்காக வெளியாட்களுக்கு வழங்குகின்றனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி வீடுகளில் குடியிருக்கும் ஊழியர்களுக்கு தொடர்ந்தும் குறிப்பிட்ட வீடுகளில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2009/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக அதனைச் சூழவுள்ள காணிகள் அரசாங்கத்திற்குச் சுவீகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணிகளின் உரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வழங்கப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஒவ்வொரு காணி உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2025/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட த பினான்ஸ் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கோரியிருந்ததாக அப்போதைய நிதி இராஜாங்க அமைச்சரால் 2021.02.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்திற்காக பொருத்தமான முதலீட்டாளர் ஒருவர் அடையாளங்காணப்பட்டு அழைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தைக் கலைப்பதற்கான அனுமதியைக்கோரி இலங்கை மத்திய வங்கி 2021.02.15 ஆம் திகதி வர்த்தக மேல் நீதிமன்றத்தில் இலக்கம் CH/19/2021/CO என்ற வழக்கினைத் தாக்கல் செய்துள்ளது என்பதையும்;

(ii) அது மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்கு முரணானது என்பதையும்;

(iii) அதன் மூலம் மேற்படி நிறுவனத்தின் வைப்பாளர்கள் குழப்பத்திற்குள்ளாகி உள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) Sri Lanka Deposit Insurance and Liquidity Support Scheme (SLDILSS) இன் நிதியைப் பயன்படுத்தி பாதிப்புக்குள்ளான வைப்பாளர் ஒருவருக்கு தலா 500,000 ரூபா வீதம் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்திலுள்ள 60 பில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வைப்பாளர்களுக்கு முழுப் பணத்தையும் வழங்க முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2046/2024

கௌரவ லலித் எல்லாவல,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீடுகளின் மூலம் கல்துடே-அடுலுகம விதாகம வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வீதியின் இருமருங்கிலுமுள்ள காணிகளில் வசிப்பவர்கள் நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளாமல் தமது வீடுகளையும் பாதுகாப்பு மதில்களையும் அகற்றி வீதியை விரிவுபடுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர் என்பதையும்;

(iii) தற்போது அந்த வீதியின் அபிவிருத்திப் பணிகள் முற்றாக நிறுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

(iv) இதன் காரணமாக மேற்படி வீதிக்கு அருகிலுள்ள அடுலுகம அல் கஸ்ஸாலி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 3000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட அப்பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் நடந்து செல்லக்கூட முடியாமல் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்திப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2056/2024

கௌரவ வேலு குமார்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1992 ஆம் ஆண்டு அரசாங்கத் தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டபோது, கண்டி மாவட்டத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போஹில் தோட்டத்தில் காணப்பட்ட பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரிவுகளில் 2015ஆம் ஆண்டளவில் பயிரிடாது கைவிடப்பட்ட பிரிவுகள் இருந்தனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி தோட்டத்தின் காணித் துண்டுகள் / கட்டடங்கள் வெளி ஆட்களுக்கு / தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய ஒவ்வொரு நபர் / தனியார் நிறுவனத்தின் பெயர் மற்றும் வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் / கட்டடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி(i)இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு காணித் துண்டில் / கட்டடத்தில் வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2078/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சேவையை விட்டுச் சென்றுள்ள இராணுவ வீரர்களினதும் அதிகாரிகளினதும் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) அவர்கள் சேவையை விட்டுச் செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ள காரணிகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு இவ்வாறு சேவையை விட்டுச் சென்ற இராணுவ வீரர்களின் சட்ட விரோத செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2086/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தினால் எவன்கார்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள சுடுபடைக்கலன்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி சுடுபடைக்கலன்களில் எவன்கார்ட் நிறுவனத்தால் இதுவரை மீள் ஒப்படைக்கப்பட்டுள்ள சுடுபடைக்கலன்களின் எண்ணிக்கையும் மீள் ஒப்படைக்கப்படாதுள்ள சுடுபடைக்கலன்களின் எண்ணிக்கையும் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மீள் ஒப்படைக்கப்படாதுள்ள சுடுபடைக்கலன்களை மீளப் பெற்றுக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2024 யூலை 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

312/2024

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபையினால் இன்றளவில் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) சூரிய சக்தி மின் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) சூரிய சக்தியின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) இன்றேல், அத்தகையதொரு வெலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

360/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளிகளின் (முன் பிள்ளைப்பருவ சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) எண்ணிக்கை;

(ii) உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள், தனியார் துறை மற்றும் அரசாங்க இணை நிறுவனங்கள் என்ற வகைப்படுத்தலின் அடிப்படையில் இயங்கிவரும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை;

(iii) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களின் கீழ் கல்வி வழங்கப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை;

(iv) முன்பள்ளிக் கல்வி பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை;

(v) முன்பள்ளிக் கல்வி பெறாத 3-5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை;

(vi) முன்பள்ளி நிர்வாகிகளின் எண்ணிக்கை;

யாதென்பதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைவாக தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வி பெறாதமையின் மீது தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மொத்த முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையானது அவர்களின் கல்வித் தகைமைகளின் படி வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) முன்பள்ளி டிப்ளோமா தகைமைப்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையானது, மொத்த முன்பள்ளி ஆசிரியர்களின் சதவீதமாக யாதென்பதையும்;

(iii) முன்பள்ளிகளுக்கான பொதுப் பாடவிதானம்/பொதுப் பாடநெறி மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைநூல் உள்ளனவா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளை ஒழுங்குறுத்துவதற்கான முறையியல் காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இல்லையெனில், அவை இயங்கும் முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

370/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிலும் அதன் கீழுள்ள நிறுவனங்களிலும் பணியாற்றிய அமய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள் 2019 ஆம் ஆண்டின் பின்னர் நீக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) அவர்கள் நீக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீக்கப்பட்டுள்ள மேற்படி ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்கள் தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

375/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தாய்லாந்தில் சிகிச்சை பெற்றுவரும் முத்துராஜா யானை இலங்கையில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) முத்துராஜா யானையை மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பழக்கப்பட்ட யானைகள் 2022 ஆம் ஆண்டில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் பதிவாகியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

382/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாகனப் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள்/குறிக்கோள்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிதியத்தின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) புகை வெளியேற்றல் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களினால் மேற்கூறப்பட்ட நிதியத்திற்கு மாதாந்தம் வழங்கப்படவேண்டிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(v) அதற்கமைய ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இன்று வரை மேற்படி நிறுவனங்களிலிருந்து மேற்கூறப்பட்ட நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைவாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட நிதியம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள்/ குறிக்கோள்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு நீண்டகால கூட்டுத்திட்டமொன்று அல்லது வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் நிதியத்தின் பொறுப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி திட்டங்களுக்கமைவாக நிதியத்தினால் இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு ஆண்டிற்கமைவாகவும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

468/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் பல்வேறு காரணங்களுக்காக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை மற்றும் குறிப்பிட்ட மருந்துகளின் பெறுமதி என்பன வெவ்வேறாக யாவை;

(iii) மருந்துகளை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மருந்துகளை களஞ்சியப்படுத்துவது தொடர்பில் கணக்காய்வு அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள வினவல்கள் யாவை;

(ii) கணக்காய்வு வினவல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

513/2024

கௌரவ ரோஹண பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹகனதராவ திட்டத்தின் கீழ் தற்போது பயிரிடப்படுகின்ற நெற் செய்கை காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி திட்டத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மஹகனதராவ திட்டத்தின் கீழ் நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளை நீர்ப்பாசன அலுவலர்கள் அச்சுறுத்தியுள்ளனர் என்பதை அறிவாரா;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

544/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இலங்கை போக்குவரத்துச் சபையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணைகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அந்த விசாரணைகளின் பிரகாரம் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) நிவாரணங்கள் வழங்கப்படாத ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) நிவாரணங்கள் வழங்கப்படமாட்டாதெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

564/2024

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நடுவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) அவை வழங்கப்பட்ட பிரசேதங்கள் மற்றும் கன்றுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி தென்னங் கன்றுகள் உரியவாறு வளர்ச்சியடைகின்றனவா என பின்னாய்வு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி தென்னங் கன்றுகளுக்கு மத்தியில் சரியாக வளர்ந்து வரும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) எதிர்வரும் ஆண்டில் விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1245/2024

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கும் வேலைதிட்டத்தின் கீழ் முதலாம் கட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்பெறுநர்களின் எண்ணிக்கை, இரண்டாம் கட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்பெறுநர்களின் எண்ணிக்கை மற்றும் இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்பெறுநர்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்பெறுநர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்பெறுநர்களுக்காக நிரந்தர பணியிடம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) நிரந்தர பணியிடம் வழங்கப்படாத தொழில்பெறுநர்கள் இருப்பின், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழில்பெறுநர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 யூலை 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

595/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி மற்றும் அதனை அண்மித்த நாட்களில் இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களின் போது வீடுகள்/ சொத்துக்கள்/அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்/முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள்/உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இதர நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினர்/நபரின் சேதப்படுத்தப்பட்ட சொத்துக்களின் பெறுமதி வெவ்வேறாகவும் சேதப்படுத்தப்பட்ட சொத்துக்களின் முழுப் பெறுமதியும் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கலவரங்களின் போது சேதமடைந்த அரச/பொதுச் சொத்துக்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு சொத்துக்கும் ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) அரச/பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் முழுப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

612/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1978 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கம் வசமிருந்த அரச கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் ஏனைய உற்பத்தி, சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி/ வழங்கப்பட்ட சேவை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு மத்தியில் இன்றளவில் இயங்கி வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற அரசாங்கத்தின் உடைமையுரிமை சதவீத அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட உற்பத்தி/சேவை நிறுவனங்களுள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி/ வழங்கப்பட்ட சேவை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுள் இன்றளவில் வங்குரோத்தடைந்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

639/2024

கௌரவ பீ.வை.ஜீ ரத்னசேக்கர,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேங்காய் உற்பத்தி மாகாண வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கு நிகராக 2023 ஆம் ஆண்டில் மொத்த தேங்காய் உற்பத்தியின் ஏற்ற இறக்கம் எவ்வாறு காணப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) தேயிலை ஏற்றுமதியின் மூலம் மேற்படி ஆண்டில் ஈட்டப்பட்டுள்ள வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களினால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஆராய்ச்சிகளின் பிரதான கண்டுபிடிப்புகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1090/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைக் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) முறையாகப் பதிவு செய்யப்படாத குத்தகைக் கம்பனிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) குத்தகைக் கம்பனிகள் பல்வேறு வட்டி விகிதங்களை அறவிடுவதன் காரணமாக குறித்த கம்பனிகளுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள தரப்பினர்கள் பாரிய அசௌகரியத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகள் அறவிடும் வட்டி வீதங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) குத்தகை வசதிகளைப் பெற்றுக்கொண்டுள்ள வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1129/2024

கௌரவ டீ. வீரசிங்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு;

(ii) மேற்படி காணிகளில் தற்போது பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(iii) மேற்படி காணிகளில் தற்போது உறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(iv) எதிர்காலத்தில் உறுதிகள் வழங்கப்படவுள்ள காணிகளின் அளவு;

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அமைய தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1156/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியுமா என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) குறித்த வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான அதிகாரம் யாதென்பதையும்;

(iv) பாதுகாப்பற்ற முறையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதன் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1246/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' இனால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் முன்னேற்றத்தினையும்;

(ii) இந்தச் சபைக்கும் பொதுமக்களுக்கும் மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கச் செய்யப்படும் திகதியினையும்;

(iii) விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' முன்வைத்த இதே குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காகப் பாராளுமன்ற விசேட குழுவொன்றினை நியமித்தமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்படி குழுவின் முன்னேற்றத்தினையும்;

(iii) எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

(iv) மேற்படி குழுவின் பரிமாணங்களையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறிப்பிட்ட தாக்குல்கள் பற்றிய ஒரு சுயாதீனமான, சர்வதேச விசாரணைக்கான அழைப்புக்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் புறக்கணித்தமைக்கான காரணங்களையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1254/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு முன்னர் புத்தளம், வனாத்தவில்லுவ பிரதேசத்திலுள்ள காணியொன்றிலிருந்து வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடைய விசாரணைகளை நெறிப்படுத்திய பொலீஸ் அலுவலர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விசாரணைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் மேற்படி விசாரணைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி விசாரணைகள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டிருப்பின், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலைத் தவிர்த்திருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1288/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலனறுவை மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் தொழிநுட்பப் பிரிவில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) பொலனறுவை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் தொழில்நுட்பப் பிரிவை பிரபல்யப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2005/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.31 ஆம் திகதியாகும்போது அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கையின் மருந்து வழங்குனர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை, ஒவ்வொரு மருந்து வழங்குனரின் படி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இந்திய அரசாங்கத்தின் கடன் உதவியின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளுக்காக 2024.01.31 ஆம் திகதியாகும்போது இந்திய மருந்து வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, ஒவ்வொரு மருந்து வழங்குனரின் படி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?